1972 டிசம்பர் 8]

Modernisation of Sugar Mlils.

* 92 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to modernise the sugar mills in this State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவ்வித செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசிலனையில் இல்லை.

Film shows in Central Jails.

* 93 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether film shows are exhibited in the Central Jails in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) அவ்வப்போது சிறையிலுள்ள கைதிகளுக்கு ஒழுக்க, கல்வி சம்பந்தப்பட்ட திரைப் படங்களும் செய்திப் படங்களும் காட்டப்படுகின்றன. மாவட்ட விளம்பர அதிகாரிகள் அல்லது சமூக மன்றங்கள் அல்லது சேவை மனப்பான்மையுள்ள தனிப்பட்ட நபர்கள் அல்லது மற்றும் அயல்நாட்டு தூதரகங்கள் இவற்றிற்கு தேவையான கருவிகளை (projectors) வழங்கு கிறார்கள். இத்தகைய திரைப்படங்கள் மேற்கூறியவர்களால் தங்கள் விருப் பப்படி காண்பிக்கப்படுகின்றன. அதற்காக எந்தவிதமான கட்டணமும் வசூ லிக்கப்படுவதில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, கைதிகளுக்கு சிறைச்சாலை களில் சீர்படுத்தும் சிறந்த திரைப்படங்கள் மாத்திரமே காட்டப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் நான் இப்பொழுது விவர மாகச் சொன்னேன். பல்வேறு வகைப்பட்ட திரைப்படங்கள் காட்டப்படு கின்றன, ஒழுக்கம் அங்கே வளர வேண்டுமென்ற அடிப்படையில்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சிறைச்சாலையிலே கைதிகளை திருத்துவதற்காக ஒழுக்கம் தேவை என்ற அடிப்படையிலே நல்ல திரைப் படங்கள் காட்டப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் திருடாதே என்ற படத்தைப் போன்ற படங்கள் காட்டப்படுவதாகச் சொல்கிறார்கள். திருடாதே